பக்கங்கள் 19

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 06 வெள்ளிக்கிழமை 22.12.2023 அதிர்வு 144

## இளைஞருடன் சென்ற யுவதி பாவற்குளத்தில் மூழ்கிச் சாவு

### சடலத்தைப் பார்வையிட்ட பதில் நீதிவான்



(கி.வசந்தரூபன்)

வவுனியா, பாவற்குளம் நீர்த் தேக்கத் துக்கு இளைஞருடன் சென்ற 04▶

# தேர்தல் வெற்றியே ரணிலின் இலக்கு

## தீர்வு பற்றி அவருக்கு அக்கறையே இல்லை என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு



(எஸ்.நிதர்ஷன்)

“ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் எவ்வாறு வெற்றி கொள்வது? அதற்குப் புலம்பெயர் தமிழர்களையும், வடக்கு - கிழக்குத் தமிழர்களையும் எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது? போன்ற சிந்தனைகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபடுகின்றாரே தவிர, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது அவரது முன்னுரிமைப் பட்டியலில் கிடையவே கிடையாது என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது.”

- இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். 04▶

# ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தை விற்பனை செய்யாதே!

## யாழ்ப்பாணத்தில் ஊழியர்கள் போராட்டம்

VIDEO



(எஸ்.நிதர்ஷன்)

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தைத் தனியாருக்கு விற்பனை செய்யும் அரசின் திட்டம் கைவிடப்பட வேண்டும் எனக் கோரி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் வடக்கு மாகாண தலைமை அலுவலகத்துக்கு முன்பாக இன்று ஊழியர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ரெலிகொம் நிறுவனத்தை விற்பனை செய்யாதே, ஊழியர்களின் சலுகைக் கொடுப்பனவை வழங்கு, நாட்டின் வளங்களை விற்பனை செய்வதை நிறுத்து போன்ற கோஷங்களைப் போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் எழுப்பினர்.

அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

“இருக்கும் நிறுவனத்தை அரசு விற்பனை செய்யும் தீர்மானத்தைக் 04▶

# ஜனாதிபதியிடம் நற்சான்றுப் பத்திரத்தைக் கையளித்த இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா







இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவராக நியமனம் பெற்றிருக்கும் சந்தோஷ் ஜா இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தனது நற்சான்றுப் பத்திர்ததைக் கையளித்தார்.

சந்தோஷ் ஜா இலங்கைக்கான தூதுவராக நியமனம் பெறுவதற்கு முன்னதாக 2020 ஜ⁶லை மாதத்திலிருந்து 2023 டிசம்பர் வரையில் பெல்ஜியம் நாட்டுக்கான இந்தியத் தூதுவராகச் சேவையாற்றினார்.

இந்தியா – இலங்கை மற்றும் இந்திய – ஐரோப்பிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கான பேச்சுக் குழுகளிலும் சந்தோஷ் ஜா அங்கம் வகித்துள்ளார்.

இந்திய, இலங்கைக்கு இடையில் காணப்படும் நீண்டகாலப் பொருளாதார, கலாசார மற்றும் சமூக தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்ள அர்ப்பணிப்பதாக ஜனாதிபதி மாளிகையில் வைக்கப்பட்டிருந்த விருந்தினர் பதிவேட்டில் சந்தோஷ் ஜா குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா – இலங்கை வரலாற்று நட்பை மேலும் பலப்படுத்தவும், வர்த்தக, முதலீட்டு, வலுசக்தி உள்ளிட்ட பல துறைகளில் காணப்படும் நெருங்கிய ஒத்துழைப்புக்களை மேம்படுத்திக் கொள்ளவும் அர்ப்பணிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இரு நாட்டுத் தலைவர்களும் ஏற்றுக்கொண்ட தெரிவுக்கு அமைய செயற்படுவதே தனது எதிர்பார்ப்பாகும் என்றும், இரு நாடுகளினதும் ஒத்துழைப்பு, நெருங்கிய நட்பு என்பனவே வலயத்தின் முன்னேற்றம், நிலைப்புத் தன்மைக்கு காரணமாக அமைந்துள்ளது எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சுகாதார மற்றும் தொழிற்சாலைகள் அமைச்சரும் பதில் வெளிவிவகார அமைச்சருமான ரமேஷ் பத்திரன மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து நாளை கலந்துரையாடல்

(எஸ்.நிதர்ஷன்)

“ஒன்றுபட்டுக் குரலுயர்த்தி உறவுகளை சிறை மீட்போம்” என்ற தொனிப் பொருளில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம், தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் “குரலற்றவர்களின் குரல்” அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

“ஒரு மனிதநேய சிவில் செயற்பாட்டு அமைப்பு என்ற வகையில் “குரலற்றவர்களின் குரல்“ அமைப்பினராகிய நாம், எமது சக மனிதநேயப் பற்றாளர்களான மக்கள் நலன் சார்ந்த



அனைத்துத் தரப்பினர்களினதும் மனமிசைந்த ஒத்துழைப்புடன், 28 ஆண்டு காலமாகத் தொடர் சிறை வைக்கப்பட்டுள்ள 14 தமிழ் அரசியல் கைதிகளினதும் மனிதாபிமான விடுதலையை வலியுறுத்திய செயற்கரும செய்தி ஒன்றை பொதுவெளியூடாக நாட்டின் ஜனாதிபதியிடம் கொண்டு சேர்க்கும் காலக் கடமையொன்றை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

எனவே, இந்தக் கருணைப் பணி குறித்த இலக்கை எய்துவதற்கு சமூக நேசங்கொண்ட அனைவரும் தமது உயர்ந்தபட்ச ஒத்துழைப்பைத் தந்துதவ வேண்டுமென அன்புரிமையுடன் திறந்த பொது வேண்டுகோளை விடுப்பது தொடர்பாகவும், அதனை எவ்வடிவத்தில் நடைமுறைச் சாத்தியப்படுத்துவது எனவும் அவசரமாகக் கலந்துரையாடவேண்டியுள்ளது.

ஆகவே, இந்த விடயம் தொடர்பாக நாளை நடைபெறும் கலந்துரையாடலில் அனைவரும் பங்கேற்று தமது ஒத்திசைவை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.” – என்றுள்ளது.

### பருத்தித்துறைக் கடலில் கைதான

# 13 இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்தும் விளக்கமறியலில்

### கடற்படையினரைத் தாக்கிய குற்றச்சாட்டில்



(ந.லோகதயாளன்)

**இலங்கைக் கடற்பரப்புக்குள் சட்ட விரோதமாக உள்நுழைந்த குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட 13 இந்திய மீனவர்கள், கடற்படையினரைத் தாக்கிய குற்றச்சாட்டில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.**

பருத்தித்துறை கடற்பரப்புக்குள் அத்துமீறி இரண்டு படகுகளில் உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த 10 ஆம் திகதி 25 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவ்வாறு கைது செய்யப்பட்ட 25 பேரும் இன்று வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் இந்த வழக்கு இன்று பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்ருக்கொள்ளப்பட்டது.

இவ்வாறு இடம்பெற்ற வழக்கில் 13 மீனவர்கள் பயணித்த படகில் உரிமையாளரும் இருந்தமையால் படகு அரச உடமையாக்கப்பட்டதோடு மீனவர்களுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத் தண்டனையுடன் விடுவிக்கப்பட்டனர்.

இருந்தபோதும் மேற்படி 13 மீனவர்களும் தம்மைத் தாக்கினர் என்று கடற்படையினர் பருத்தித்துறை பொலிஸாரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அதனைப் பருத்தித்துறைப் பொலிஸார் வழக்காகப் பதிவு செய்திருந்தனர்.

இதையடுத்துப் பருத்தித்துறைப் பொலிஸாரின் அந்த வழக்கை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள திகதியிடப்பட்டு 13 மீனவர்களும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம் எஞ்சிய 12 மீனவர்கள் மீதான வழக்கில் படகின் உரிமையாளர் படகில் இல்லாத நிலையில் அவரையும் இணைத்து 13 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதால் அது தொடர்பில் ஆராய்ந்து அடுத்த தவணையில் கட்டளையாக்குவதாகத் தெரிவித்து அந்த வழக்கும் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### நெடுந்தீவில் கைதான 13 இந்திய மீனவர்களுக்கும்

# 18 மாதங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 13 இந்திய மீனவர்களுக்கும் 18 மாத சிறைத்தண்டனை விதித்த ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றம், அதனை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்துள்ளது.

கடந்த 6ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பினுள் மூன்று படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 13 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மறுநாள், கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட வேளை அவர்களை நேற்று வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டிருந்தது.

அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது 13 மீனவர்களுக்கு எதிரான மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் தலா 6 மாத சிறைத் தண்டனை விதித்த மன்று, அதனை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்தது.

அதேவேளை, மூன்று படகுகள் தொடர்பான வழக்கு விசாரணைக்காக எதிர்வரும் மார்ச் மாதம் 11ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்த மன்று, அன்றைய தினம் படகின் உரிமையாளர்கள் மன்றில் முன்னிலையாக வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தேர்தல் வெற்றியே...

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பின்னரே புதிய அரசியல் யாப்பின் ஊடாக தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அவரது செயலகத்தில் வடக்கு – கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இது குறித்து தமது கட்சியின் நிலைப்பாட்டைத் தெரிவித்து சுரேஷ் க.பிரேமச்சந்திரன் ஊடக அறிக்கையை இன்று வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கையின் முழு விபரம் வருமாறு:-

"21.12.2023 அன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு – கிழக்கு நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பாகவும் அபிவிருத்தி தொடர்பாகவும் பேசுவதற்காக வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்திருந்தார். இதில் வடக்கு மாகாணத்திலிருந்து ஈ.பி.டி.பியைச் சார்ந்த திலீபன் என்ற உறுப்பினரைத் தவிர, வேறு யாரும் கலந்துகொள்ளவில்லை. கிழக்கு மாகாணத்திலிருந்து இரா.சம்பந்தன், இரா. சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் (ஜனா) மற்றும் த.கலையரசன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். ஆளும் தரப்பைச் சேர்ந்த அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தாவோ, வியாழேந்திரனோ, சந்திரகாந்தன் என்றழைக்கப்படும் பிள்ளையானோ இதில் கலந்துகொள்ளவில்லை.

வடக்கு – கிழக்கு அபிவிருத்தி பற்றிப் பேசுகின்றபோது வடக்கு – கிழக்கின் அமைச்சர்களாக இருப்பவர்களும் கலந்துகொள்வில்லை. ஜனாதிபதியின் ஏமாற்றுத்தனமான நடவடிக்கைகளை எண்ணியோ என்னவோ வடக்கு மாகாணத்திலிருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவில்லை.

இத்தகைய சூழ்நிலையில்தான் வடக்கு – கிழக்கு அபிவிருத்தி தொடர்பாகவும், நல்லிணக்கம் தொடர்பாகவும் பேசப்பட்டதாக அறிகின்றோம்.

நல்லாட்சி அரசில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது ஒரு புதிய அரசியல் சாசனத்தைத் தயாரிப்பதற்கான பல்வேறுபட்ட குழுக்கள் அமைக்கப்பட்டு வரைவுகளும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், ரணிலுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக அன்றைய புதிய அரசியல் சாசனத்துக்கான முயற்சிகள் முடக்கப்பட்டன. இப்போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்ததன் பின்னர், இனப் பிரச்சினைத் தீர்வின் மேல் அக்கறை உள்ள ஜனாதிபதியாகத் தன்னைக் காட்டிக்கொள்ள முயற்சி செய்கின்றார். தமிழர் தரப்புக்களை அழைத்துப் பேசினார். நாடாளுமன்றத்தில் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு ஏனைய கட்சிகளை ஆதரவளிக்கும்படி கோரினார். அவர்களும் ஆதரவளிப்பதாக நாடாளுமன்றத்தில் தெரிவித்தனர்.

டில்லிக்குச் சென்ற போதும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதிமொழி அளித்தார். அவ்வப்போது சர்வதேச அழுத்தங்கள் வருகின்றபோது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறுவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கின்றார். இந்த விதத்தில் தான் கடந்த 21ஆம் திகதி கூட்டமும் ஜனாதிபதியின் செயலகத்தில் நடைபெற்றது.

ஊடகங்களின் செய்திகளின்படி மயிலத்தமடு காணிப்பிரச்சினை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை, கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துதல் போன்ற பல விடயங்கள் தொடர்பாகப் பேசப்பட்டன எனவும், அவற்றைச் செய்வதாக ஜனாதிபதி உறுதியளித்தார் எனவும் கூறப்படுகின்றது.

இதில் கலந்துகொண்ட சம்பந்தன் பேசுகின்றபோது, வடக்கும் கிழக்கும் மீள இணைக்கப்பட வேண்டும் என்றும், இந்திய – இலங்கை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு 13 ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும், இல்லையேல் சர்வதேச உதவியை நாட வேண்டியிருக்கும் என்றும் அவர் கூறியதாக அறியமுடிகின்றது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, 2025 இல் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி ஒருவருட காலத்துக்குள் புதிய அரசியல் சாசனத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறியது மாத்திரமல்லாமல் தற்போது 13ஆவது திருத்தத்தில் இருந்து பறிக்கப்பட்ட சில அதிகாரங்களை மீள வழங்குவதற்கு ஆலோசிக்கலாம் என்றும் கூறியுள்ளார். அதாவது ஒரு விடயத்தை அவர் மிகவும் தெளிவாகக் கூறுகின்றார். 2026ஆம் ஆண்டு முடிவடைந்தாலும்கூட தீர்வு கிடைப்பது சந்தேகமே என்பதை அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

அரசியல் சாசனத்தில் இருக்கக்கூடிய 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு கால அவகாசங்களை கோருகின்ற ஒரு விடயத்தைத்தான் எம்மால் பார்க்க முடிகின்றது. அது மாத்திரமல்லாமல் ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் எவ்வாறு வெற்றி கொள்வது? அதற்குப் புலம்பெயர் தமிழர்களையும், வடக்கு – கிழக்குத் தமிழர்களையும் எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது? போன்ற சிந்தனைகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபடுகின்றாரே தவிர, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது அவரது முன்னுரிமைப் பட்டியலில் கிடையவே கிடையாது என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது.

இப்போது புதிய இந்தியத் தூதுவர் இலங்கைக்கு வந்திருக்கின்றார். அவரை நாங்கள் இரு கரம் கூப்பி வரவேற்கின்றோம். யுத்தம் முடிந்து 14 வருடங்கள் கடந்த பின்னரும்கூட, தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சிங்கள அரச தரப்பினர் தயாராக இல்லை என்பதை புதிய இந்தியத் தூதுவர் தயவு செய்து புரிந்துகொள்ள வேண்டும். இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்குக் கொடுக்கும் உறுதிமொழிகளும் டில்லிக்குக் கொடுக்கும் உறுதிமொழிகளும் அடுத்த கனமே காற்றில் பறக்க விடப்படுகின்றன என்பதுதான் நிதர்சனமான உண்மை. இத்தகைய ஒரு சூழ்நிலையில் சிங்கள அரசியல் தலைமைகளின் அசமந்தப் போக்கைச் சுட்டிக்காட்டக்கூடிய வகையில் தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அவருக்கு வாக்களிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்." – என்றுள்ளது.

---

## இளைஞருடன்...

இளம் யுவதி ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார் என்று உளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பாவற்குளம் நீர்த்தேக்கமானது வான் பாய்ந்து வரும் நிலையில் அந்தக் குளத்துக்கு இளைஞர் ஒருவருடன் இளம் யுவதி சென்றுள்ளார். அந்த நீர்த்தேக்கம் பகுதியில் நின்ற போது யுவதி நீரில் வீழ்ந்துள்ளார். சிலர் உடனடியாக விரைந்து செயற்பட்டு யுவதியை மீட்டு, பாவற்குளம் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

எனினும், வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் முன்னரே அந்த யுவதி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யுவதியின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா, நாகர்இலுப்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய ஜன்சிகா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்நிலையில், இன்று மதியம் மேற்படி சடலத்தைப் பார்வையிட்ட வவுனியா பதில் நீதிவான் தி.திருஅருள், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டதுடன், குறித்த மரணமானது யுவதி நீரில் மூழ்கியமையால் ஏற்பட்டது எனத் தெரிவித்ததுடன், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலத்தைப் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு கட்டளையிட்டார்.

சம்பவம் தொடர்பில் உளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## ஸ்ரீலங்கா ரெலிகொம்...

கைவிட வேண்டும்.

இந்த நிறுவனத்தை நம்பி சுமார் 2 ஆயிரத்து 500 ஊழியர்கள் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துகின்றனர் .

எமது நாட்டுக்கு வருமானத்தை ஈட்டித் தருகின்ற இலாபத்தில் இயங்குகின்ற ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தை ஏன் தனியாருக்கு விற்பனை செய்ய வேண்டும்.

ஆகவே, எமது கோரிக்கைக்குச் செவிசாய்த்து ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தை விற்பனை செய்யும் திட்டத்தை அரசு கைவிட வேண்டும். இல்லையெனில் எமது போராட்டம் தொடரும்."
– என்றனர்.




# நேரத்தை வீணடிக்கும் ஓ.எம்.பி.அலுவலகம்!

## பாதிக்கப்பட்டோர் விசனம் தெரிவிப்பு!!

(கி.வசந்தரூபன்)

விசாரணை என்ற போர்வையில் எமது நேரத்தை வீணடிக்கிறது என ஓ.எம்.பி. அலுவலகத்தின் மீது பாதிக்கப்பட்ட உறவுகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்தின் விசாரணை வவுனியா பிரதேச செயலகத்தில் இன்று இடம் பெற்றது.

இதில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பலர் கலந்து கொண்டு சாட்சியமளித்திருந்தனர்.

விசாரணைகளில் கலந்து கொண்ட பாதிக்கப்பட்ட உறவுகள் ஊடகங்களுக்கு பதில் அளித்தபோது,

ஏற்கனவே இந்த அலுவலகத்துக்கு நாம் பல ஆவணங்களை வழங்கியிருக்கின்றோம். இதில் எமக்கு எந்தவித நம்பிக்கையும் இல்லை. இதுவரை எமது பிள்ளைகள் தொடர்பாக எந்தவிதமான பதிலையும் இந்த அலுவலகம் வழங்கவில்லை. அவர்கள் எமது நேரத்தை வீணடிக்கின்றனர்.- என்று தெரிவித்தனர்.


# கிழக்கு முன்னாள் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீட் காலமானார்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீட் காலமானார்.

திருகோணமலை, கிண்ணியாவைச் சேர்ந்த இவர் கொழும்பு கிங்ஸ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானார்.




# சிங்கள பெண்ணைக் கட்டியணைத்த நபர் கைது; கல்முனையில் சம்பவம்!

(பாறுக் ஷிஹான்)

வாழைப்பழம் விற்பனைக்காக தென் பகுதியில் இருந்து கல்முனை பகுதிக்கு வருகை தந்த சிங்கள பெண்ணை அத்துமீறி கட்டியணைத்த நபரை கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொதுச்சந்தை பகுதியில் 55 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரே பாதிக்கப்பட்டவராவார்.

சம்பவ தினமான இன்று (22) முற்பகல் வியாபார நடவடிக்கையில் இந்தப் பெண் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் 49 வயது மதிக்கத்தக்க மொனராகலை பகுதியை சேர்ந்த சந்தேக நபர் இந்தச் செயலில் ஈடுபட்டுள்ளார்.

இதன் போது பாதிக்கப்பட்ட குறித்த பெண் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து சிறுவர் பெண்கள் பிரிவினர் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரைக் கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## கடன் வாங்கிக் கல்யாணம்

'கடன் வாங்கிக் கல்யாணம்' என்பார்கள்.

ஆரவாரமாகக் கல்யாணத்தை நடத்தும் போது சந்தோஷமாகத்தான் இருக்கும். பின்னர் கடன் கழுத்தை இறுக்கும் போதுதான் விபரீதம் புரியும்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டதை விட அதிக தொகை கிடைப்பதாக ரணில் - ராஜபக்ஷ அரசு துள்ளிக் குதித்து மகிழ்கின்றது.

இதுவும் கடன் வாங்கிக் கல்யாணம் போன்ற மகிழ்ச்சிதான்.

கிடைத்த நிதி எதுவும் உதவியோ, வெகுமதியோ, அன்பளிப்போ அல்ல. அவை யாவும் கடன்தான். திரும்பிச் செலுத்தப்பட வேண்டிய கடப்பாடுகள்தான்.

கடனாகக் கிடைத்த தொகையை கணக்கில் வைத்துக் கொண்டு, அந்நிய செலாவணிக் கையிருப்பு அதிகரித்து விட்டது என்று துள்ளிக் குதிப்பதில் அர்த்தமில்லை என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பொருளாதார நிபுணருமான ஹர்ஷா டி சில்வா எம்.பி. கூறியிருக்கின்றார்.

அடுத்த வார இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்டக் கடன் கொடுப்பனவாக 33 கோடி 70 லட்சம் அமெரிக்க டொலர் கிடைக்கவிருக்கின்றது. அத்தோடு உலக வங்கியின் 25 கோடி அமெரிக்க டொலர் கடனும் கிடைக்கின்றது.

இவை கிட்டும் போது நாட்டின் சேமிப்பு 400 கோடி அமெரிக்க டொலர்களை (சுமார் ஒரு லட்சத்து 32 ஆயிரம் கோடி ரூபாவை) எட்டும் என்று ஆரவாரம் செய்கின்றது ரணிலின் ஆட்சிப் பீடம்.

2015 முதல் 2019 வரை ஆட்சியில் இருந்த மைத்திரி - ரணிலின் நல்லாட்சி அரசின் காலத்தில் ஆயிரம் கோடி டொலர்களை (இன்றைய பெறுமதியில் சுமார் மூன்று லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாவை) சர்வதேச பிணைமுறிக் கடன்களாக வாங்கிக் குவித்ததன் விளைவாகவே, அதன் பின்னர் வந்த ஆண்டுகளில் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்தது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிக்கை ஒன்றின் மூலம் வெளிப்படுத்தியிருந்தார்.

அந்தப் பின்னணியிலேயே - தமக்கு ஏற்பட்ட பின்னடைவு நிலையிலேயே - இப்படி எதிர்பாக்கப்பட்டமையை விட அதிக தொகை கையிருப்பாக நாட்டுக்குக் கிடைத்துள்ளது என்ற கதையை ரணில் அரசு வெளியிட்டு இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

கடனாகக் கிடைக்கும் தொகையை அந்நிய செலவாணிக் கையிருப்பாக காட்டுவதில் அர்த்தமில்லை. அவை திரும்பச் செலுத்தப்பட வேண்டிய கடப்பாடுகள். அவை நாடு உழைத்துப் பெற்ற கையிருப்புகள் அல்ல என்று பொருளாதார நிபுணர் ஹர்ஷா டி சில்வா சுட்டிக் காட்டுவது பொருளியலாளர்களுக்கும், நிபுணர்களுக்கும், வங்கியாளர்களுக்கும், அரசு நிர்வாகிகளுக்கும் புரியும். ஆனால் சாதாரண மக்களுக்கு விளங்காது.

அதனால்தான் கடனாகக் கிடைக்கும் தொகையை நாடு ஈட்டிய கையிருப்பாகக் காட்டும் பம்மாத்து இங்கு அரங்கேறுகின்றது.

குறுகிய கால சர்வதேச கடன் முறிகளாலும், நீண்ட கால கடன் அடிப்படையிலும் கிடைக்கும் நிதியை - திரும்பச் செலுத்த வேண்டிய கடப்பாடு உடைய பணத்தை - நாட்டின் அந்நிய செலாவணிக் கையிருப்பாகக் காட்டியும் கருதியும் பொருளாதார கணக்கீடுகள் மற்றும் திட்டங்கள் தீட்டப்படுவது பொருத்தமற்றது என்பது சுட்டப்படுகின்றது.

நாடு தானாக, தனது உற்பத்திகள், மூலதனங்கள் மற்றும் அந்நிய செலவாணியில் ஈட்டும் வருமானங்கள் போன்றவை மூலம் உழைத்துப் பெறும் தொகையைதான் உண்மையில் ஈட்டப்பட்ட அந்நிய செலாவணிக் கையிருப்பாகக் கணக்கெடுத்து, எதிர்கால விடயங்களைத் திட்டமிட வேண்டும்.

கடந்த காலத்தில் இவ்விடயத்தில் இழைத்த தவறும் பொருளாதார நெருக்கடி ஏற்பட ஒரு காரணமாகும். அதே தவறை மீண்டும் இழைக்காமல் இருப்பது நல்லது.

# மன்னாரில் மாணவன் துஷ்பிரயோகம் என வெளியான செய்திக்கு பாடசாலை மறுப்பு

மன்னார் கரிசல் பகுதியை சேர்ந்த 14 வயது சிறுவன் கல்வி கற்கும் பாடசாலை அதிபரால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக கடந்த 20 ஆம் திகதி ஊடகங்களில் செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்தச் செய்தியை கரிசல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை நிர்வாகம், கரிசல் ஆசிரியர் நலன்புரி சங்கம், உயர்தர மாணவர் ஒன்றியம், பழைய மாணவர் சங்கம் ஆகியவை இணைந்து மறுப்பு தெரிவித்துள்ளன.

"கரிசல் பாடசாலையானது மிகுந்த அர்ப்பணிப்பும்,ஆளுமையும் உள்ள அதிபரின் நிர்வாக திறமையினால் மிகச் சிறந்த கல்வி அடைவை பதிவு செய்து வருகிறது.

"எனினும் அண்மைய நாளில் இடம்பெற்ற ஒரு சிறிய சம்பவம் ஒன்று குறித்த பாடசாலையின் மீது காழ்ப் புணர்ச்சியும் அதிபர் மீது கொண்ட தனிப்பட்ட பகைமை காரணமாகவும் குறித்த சம்பவத்தை பெரிதாக திரிவு படுத்தப்பட்டமைக்கு எமது கடுமையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

"குறித்த செய்தி பாடசாலை சமூகத்திற்கும்,கிராமத்திற்கும்,அதிபருக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தி உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்." – என்று அந்த அமைப்புகளினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அக்கரைப்பற்று ஆயிஷா மாணவர் பாராட்டு

(எம் எப்.நவாஸ்)

அக்கரைப்பற்று ஆயிஷா மகளிர் வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் 5 ஏ பெறுபேற்றுக்கு அதிகம் பெற்றுத் திறமை காட்டிய மற்றும் உயர் தர பரீட்சைகளில் சித்தி பெற்று பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவிகள் கௌரவிக்கப் பட்டனர்.

அதிபர் திருமதி.நஜிமா ஹாறுடீன் தலைமையில் நிகழ்வு பாடசாலைக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினரும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான ஏ. எல். எம். அதாவுல் லாஹ்வும் விசேட அதிதியாக வலயக் கல்வி பணிப்பாளர் ஏ எம். ரஹ்மத் துல்லாஹ்வும் கலந்து கொண்டனர்.




பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக் கல்வி பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகி யோரும் கலந்து கொண்டனர்.

இதன் போது கலை கலாசார நிகழ்வுகளும் மாணவர்களின் பேச்சு பாடல் என்பனவும் இடம்பெற்றன.

# சிறுவர் மற்றும் பெண்களுக்கு விழிப்புணர்வு

(எம்.எப்.நவாஸ்)

பெண்களுக்கு எதிரான வன்முறையைக் குறைத்தலும் சிறுவர் மேம்பாடும் தொடர்பாக அட்டாளச்சேனை பின்தங்கிய கிராமமான சம்பு நகரில் விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது.

உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹிஜா முஸாபிர் தலைமையில் சன சமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு சிறுவர் பெண் நடத்தை உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அந்தப் பிரிவு பள்ளிவாசல் தலைவர் , கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் , பாடசாலை அதிபர் மற்றும் அக்கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.









# பொகவந்தலாவவில் கௌரவிப்பு!

(பொகவந்தலாவ நிருபர்)

பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் இல. 02 தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறு பேறுகளை பெற்ற மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் வோல்ட் மத்திய பிரிவு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்துக்கு அருகில் இடம் பெற்றது.

பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச் சலம் அரவிந்தகுமார் கலந்து கொண் டார்.

வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்களான ஏ.அருளாநந்தன் சுந்தரேசன், பிரதேசத்துக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர் மற்றும் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சருக்கு அமோக வரவேற்பு அழிக்கப்பட்டது.

சித்தியெய்திய மாணவர்களுக்குப் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். கற்பித்த ஆசிரியர்களும் நினைவு பரிசு வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டனர்.





# கணினி ஆய்வு கூடம் மறுசீரமைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

டயலொக் ஆசீ ஆடா பீ.எல்.சி. நிறுவனம், இலங்கை விமானப்படை மற்றும் ஈ.டபிள்யூ. தகவல் முறைமை ஆகியவற்றுடன் இணைந்து திருகோணமலை, கன்னியா, இராவணேஸ்வரன் தமிழ் வித்தியாலயத்தின் கணினி ஆய்வு கூடத்தை மறுசீரமைத்து மேம்படுத்தும் நோக்கில் பாடசாலைக்கு டிஜிற்டெல் உபகரணங்களை வழங்கியது.

பாடசாலை அதிபர் தாமோதரம் பிள்ளை சிவானந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் டயலொக் நிறுவன உத்தியோஸ்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# கண்டி பொலிஸ் பிரிவில் 132 சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டனர்

## கடந்த மூன்று வருட புள்ளி விவரங்கள் தகவல்

**(மஸ்கெலியா நிருபர்)**

கண்டி பொலிஸ் பிரிவில் 17 பொலிஸ் நிலையங்களின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் கடந்த மூன்று வருடங்களுக்குள் 16 வயதுக்கு குறைந்த 132 சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர்.

கண்டி தேசிய வைத்தியசாலையின் வைத்தியரான சட்டத்தரணி பாலித பண்டார சுபசிங்ஹ இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

16 வயதுக்கும் குறைந்த சிறுமிகள் 132 பேரும் 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் தங்களுடைய விருப்பத்தின் பேரில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத் தப்பட்டுள்ளனர். இது பெரும் அபாயகரமானது என்றும் வைத்தியர் தெரிவித் துள்ளார்.

17 பொலிஸ் நிலையங்களின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்ட சிறுமிகளில், 15 சிறுமிகள் தங்களுடைய விரும்பமின்றித் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

14 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப் பட்ட சிறுமிகளில் 2021 ஆம் ஆண்டு 79 பேரும், 2022 இல் 93 பேரும் கண்டி வைத்தியசாலையின் நீதிமன்ற வைத்திய பிரிவுக்கு, வைத்திய பரிசோதனைக்கு பொலிஸ் நிலையங்களின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

2018 முதல் 2021 வரையில் 16 வயதுக்கும் குறைந்த சிறுமிகள் பாலியல் ரீதியில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் நாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு 6 ஆயிரத்து 307 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதில் 5 ஆயிரத்து 55 முறைப்பாடுகள் சிறுமிகளால் தங்களுடைய விருப்பத்தின் பேரில் முன்வந்து செய்யப்பட்டுள்ளன.



# திருக்கோவிலில் திருவெம்பாவை

**(வி.ரி.சகாதேவராஜா)**

திருக்கோவில் விநாயகபுரம் திருநாவுக்கரசு நாயனார் குரு குலத்தில் பணிப்பாளர் கண இராஜரெத்தினம் தலைமையில் தினமும் திருவெம்பாவை பூஜை நடைபெற்றுவருகிறது.





## வெளிநாட்டு சுற்றுலா பயணிகளால்

# கற்பிட்டி கண்டல்குழிக் கடலில் ஆமைக் குஞ்சுகள் விடப்பட்டன

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கண்டல்குழி வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் பராமரிக்கப்பட்டு வந்த ஆமைக் குஞ்சுகள் நேற்று முன் தினம் புதன்கிழமை (20) மாலை வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகளால் கடலில் விடுவிக்கப்பட்டன.

கற்பிட்டி கண்டல்குழி கடற்கரையில் ஆமைகளால் இடப்படும் முட்டைகளை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பாதுகாப்பாக சேகரித்து குஞ்சு பொறித்த பின்னர் அவை கடற்கரையில் விடுவிக் கப்பட்டு வருகின்றன.



இந்த நிலையில், கடந்த மாதம் ஆமை முட்டைகளை சேகரித்து பராம ரிப்பு நிலையத்தில் வைக்கப்பட்டு 45 நாள்களின் பின்னர் முட்டையிலிருந்து 27 ஆமைக் குஞ்சுகள் வெளியில் வந் தன என்று வனஜீவராசிகள் திணைக் களத்தினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில் வெளிநாட்டுச் சுற்று லாப் பயணிகள் ஆமைப் பராமரிப்பு நிலையத்துக்குச் சென்ற நிலையில் அவர்கள் அந்த 27 ஆமைக் குஞ்சு களை பாதுகாப்பாக கடலில் விட்டனர்.

அந்தக் கடலாமை அரிய வகையான மஞ்சள் நிறச் சிற்றாமை வகையைச் சேர்ந்தது என்று கற்பிட்டி கண்டல்குழி வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

# மரக்கறித் தோட்டத்தினுள் கஞ்சா வளர்த்தவர் கைது!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திகன, குணவெல பிர தேசத்தில் மரக்கறித் தோட்டம் ஒன் றுக்கு கஞ்சா செடி வளர்த்து வந்தவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

பூத்த நிலையில் 8 அடி உய ரத்துக்கு வளர்ந்து காணப்பட்ட கஞ்சா செடியைத் தெல்தெனிய குற்றத் தடுப்பு பொலிஸார் கண்டு பிடித்து கைப்பற்றியதுடன் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.





# திருக்கோவிலில் ஒளிவிழா!

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் புனித சூசையப்பர் தேவாலயத்தில் இந்த ஆண்டுக்கான வருடாந்த ஒளிவிழாவும் குடும்ப ஒன்று கூடலும் பங்கு தந்தை வண. அன்ரனி டிலியா தலைமையில் இடம்பெற்றன.





# மாணவரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ‘மூச்சு’

பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் அதிகரிக்கும் போதைப் பாவனை, அதனால் ஏற்படும் தற்கொலைகளைத் தடுக்கும் நோக்கில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் யாழ். கொடிகாமம் நட்சத்திரமஹாலின் அனுசரணையோடு கே.ரீ.கே. புரொடக்சன் தயாரிப்பில் கலைஞானி குமரநாதன் இயக்கத்தில் “மூச்சு” என்ற திரைப்படம் உருவாகிக்கொண்டிருக்கின்றது.

திரைப்படத்துக்கான படப்பிடிப்புக்கள் யாழ். மாவட்டத்தின் பிரசித்திபெற்ற இடங்களில் இடம்பெற்று வருகின்றன.

திரைப்படத்துக்கான எழுத்து இயக்கம், கலை இயக்கம், தயாரிப்பு, பாடல்கள் கலைஞானி கே.ரி குமரநாதனின் உருவாக்கத்திலும், சண்டைப் பயிற்சியாளராக சி.யர்சிலீன் செயற்படுகிறார். ஒளிப்பதிவு மற்றும் படத் தொகுப்பு பணிகளை யாழ். புகழ்ராசி கலையகம் முன்னெடுத்து வருகின்றது.

கதாநாயகனாக கலைஞானி குமரநாதன், கதாநாயகியாக ஷரோனி பெர்ணான்டோ, வில்லன்களாக எழில்மாறன், திருச்செல்வம், இராசநாயகம், நிஜந்தன், பிரசாந், வின்சன் மற்றும் ஜனித் ஆகியோரும் செயற்படுகின்றனர்.

ஆசிரிய ஆலோசகர் ஈஷ்வரன், பேராசிரியர் கலாநிதி தனபாலன்,கலைஞர் நவம், ஊடகவியலாளர் சுபேசன், நகுலேஸ்வரி, தமிழ்ச்செல்வி, பிளசித்தம்மா,துரைசிங்கம்,மகேஸ்வரன்,சிவஞானம் உள்ளிட்ட ஏராளமான நடிகர்கள் மூச்சு திரைப்படத்தில் நடித்து வருகின்றனர்.

திரைப்படத்தில் இரண்டு பாடல் மற்றும் இரண்டு சண்டைக் காட்சிகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

வழிமாறிச் செல்லும் இளைய சமுதாயத்துக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, ‘மூச்சு’ திரைப்படம் பலத்த எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.





# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அறிந்திருக்க வேண்டும்

## கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

மனித உரிமைகள் பாதுகாவலர்களின் பாதுகாப்பு தொடர்பான பொது வழிகாட்டுதல்கள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பற்றி அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் இவ்வாறு தெரிவித்தார்.

மனித உரிமை என்பது ஒவ்வொரு மனிதருக்கும் இருக்கும் பிரிக்க முடியாத ஒன்றாகும். அவ்வுரிமைகளை எவரும் பிரித்துக் கொடுக்கவோ அல்லது பேரம் பேசவோ முடியாது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும் போது இவ்வாறு குறிப்பிட்டார். சகலருக்கும், கௌரவம், சுதந்திரம் மற்றும் நீதி என்ற தொனிப் பொருளில் இந்த வருட நிகழ்வு இடம்பெற்று வருகிறது. மனித உரிமைகள் பாதுகாவலர்களின் பாதுகாப்புத் தொடர்பான பொது வழிகாட்டுதல்கள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பற்றி விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

மனித உரிமைகள் பாதுகாவலர்கள் பற்றி 1998 ஆம் ஆண்டு டிசெம்பர் 9 ஆம் திகதி ஐ.நா. பொதுச்சபை மனித




உரிமைகள் அடிப்படை உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் தனிநபர்கள், குழுக்கள் இவர்களின் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.

மனித உரிமைகள் பாதுகாவலர்கள் என்பவர்கள் தனித்தனியாக அல்லது ஏனைவர்களுடன் இணைந்து மனித உரிமைகளை அமைதியாக பாதுகாப்பவர்கள்.

பெண்கள் குழந்தைகள், இன மற்றும் மத சிறுபான்மையால் இயலாமையுடையவர்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் தேசிய சர்வதேச மட்டங்களில் மனித உரிமைகள் அடிப்படை சுதந்திரங்களைப் பாதுகாப்பதற்கும் செயல்படுத்துவதற்கும் அவற்றை தனித்தனியாக அல்லது ஏனையவர்களிடம் ஒருங்கிணைத்து ஊக்குவிக்கவும் நடைமுறைப்படுத்தவும் அனைவருக்கும் உரிமைகள் உள்ளது.

சமூக பொருளாதார அரசியல் மற்றும் ஏனைய துறைகளில் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தங்களது செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான அனைத்து சூழ்நிலைகளையும் அரசு ஏற்படுத்தித்தரல் வேண்டும்.

அரச அதிகாரிகளுக்கு மனித உரிமைகள் பாதுகாவலர்கள் பற்றிய விழிப்புணர்வையும் பாதுகாப்புப் படையினரை பயிற்றுவிப்பதற்கான முயற்சிகளையும் படையினரின் பாடத் திட்டத்துக்குள் உள்ளடக்கிகற்பித்தல்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பரிந்துரைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு செய்துள்ளது.– என்றார்.




# மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுள்ள மாணவி பரிசில் வழங்கிக் கௌரவிப்பு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

பாடசாலை மாணவர்களுக்கிடையே முயற்சியாண்மை கருத்துக்களை ஊக்குவிக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் அண்மையில் மாணவர்களிடையே போட்டிகள் இடம்பெற்றிருந்தன.

இதன் போது விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் கனிஷ்ட பிரிவில் பங்குபற்றிய காத்தான்குடி மெத்தைப்பள்ளி வித்தியாலய மாணவி மாவட்ட ரீதியாக முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். இந்த மாணவிக்கு பணப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

பங்கு பற்றிய ஏனைய இரண்டு மாணவர்களும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு மட்டக்களப்பு வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.



# பாணந்துறை கடற்கரைப் பகுதி சிரமதானம் மூலம் சுத்திகரிப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண காலநிலை காரணமாக மிகவும் மோசமாக சுற்றுச் சூழல் பாதிப்புக்குள்ளாகியிருந்த பாணந்துறை கடற்கரை பிரதேசம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான சிரமதான நிகழ்வில் பாணந்துறை பொலிஸ் அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவன அதிகாரிகள் இணைந்து கொண்டனர். பாணந்துறை கல்பெம்ம பிரதேசத் தில் இருந்து உயன்கலே பிரதேசம் வரையுமுள்ள கடற்கரை பிரதேசம் சுத்தம் செய்யப்பட்டது.



# இறக்காமத்தில் புகைப்படக் கண்காட்சி!

(வி.ரி.சகாதேவராஜா)

இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரி ஏற்பாடு செய்திருந்த புகைப்பட கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை கல்லூரியின் பிரதி அதிபர் ஏ.ஆர்.எம். அமீன் ஹிதாயா மீராலெவ்வை, இணை பாடத்திற்கு பொறுப்பான உதவி அதிபர் ஏ.எம்.எஸ். இர்பானா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக கிழக்கு மாகாணத்தின் அழகியல் பிரிவுக்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் சுந்தரம் ஸ்ரீதரன் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தின் அழகியல் பிரிவுக்குப் பொறுப்பான ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல். அப்துல் முனாப் கலந்து கொண்டார்.

கல்லூரியின் ஆசிரியர்களான எஸ். எல்.எம். குத்தூஸ், வி.ரி. றிஸ்வானா, எம்.ஐ. றிப்கா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதில் இறக்காமம் பிரதேசத்தை ஒட்டிய காட்சிகளாக 200 புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இது மாணவர்களின் திறன்களை வெளிக்காட்டி இருந்தது. உண்மையிலேயே பாராட்டத்தக்க விடயம் என்று பணிப்பாளர் சிறிதரன் தெரிவித்தார்.





# பரிகாரம் பூசை செய்வதாக கூறி நகைகளை அபகரித்த இந்தியர்கள்

## கல்முனையில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

உணவகம் ஒன்றின் உரிமையாளரது மனைவியிடம் பரிகார பூஜை செய்வதாகக் கூறி 8 பவுணுக்கு அதிகமான நகைகளை அபகரித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ள இரு இந்தியர்கள் தொடர்பில் கல்முனை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உணவகம் ஒன்றில் கடந்த புதன்கிழமை (20) இரவு சம்பவம் இடம்பெற்றுள்ளது. மறுநாள் (21) பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினமான அன்று இரு இந்தியர்கள் பரிகார பூஜை தொடர்பாக இருவேறு சந்தர்ப்பங்களில் உணவக உரிமையாளரது மனைவியான பெண்ணிடம் உரையாடியுள்ளனர்.

இதற்கமையப் பரிகார பூஜை தொடர்பில் சம்பவ தினமன்று இரவு உணவகத்துக்கு வருகை தந்த இரு இந்தியர்களும் தனிமையில் இருந்த பெண்ணை அணுகி பரிகார பூஜை தொடர்பில் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது பூஜைக்கு இணங்கிய பெண் தன்னிடம் இருந்த தங்க மாலை உள்ளடங்கலாக ஏனைய நகைகளை, இரு இந்தியர்களும் குறிப்பிட்டபடி மண் சட்டியில் போட்டு மூடி பூஜைக்கு கொடுத்துள்ளார்.

இவ்வாறு பூஜை இடை நடுவில் சென்ற போது பூஜைக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட தேசிக்காய் ஒன்றை வீட்டின் உள்ளே வைக்குமாறு அந்தப் பெண்ணிடம் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பெண் வீட்டின் உள்ளே சென்று பரிகாரம் நிறைவேற அதை வைத்துவிட்டு வந்துள்ளார். அச்சமயம் அவர்கள் ஏற்கனவே தயாராகக் கொண்டு வந்த பிறிதொரு மூடப்பட்ட மண்சட்டியை அவ்விடத்தில் மாற்றியுள்ளனர்.

இதனையடுத்துப் பூஜையை நிறுத்திப் பின்னர் தங்க நகை அடங்கிய மண்சட்டியை தம்வசம் எடுத்துச் சென்றுள்ளனர். 3 நாட்களில் பின்னர் மண்சட்டியை திறந்து பார்க்குமாறு அந்தப் பெண்ணிடம் கூறியுள்ளனர்.

உணவகத்துக்கு வந்த உணவக உரிமையாளர் தனது மனைவியிடம் கழுத்தில் கிடந்த நகை எங்கே என்று கேட்டுள்ளார். இதன்போது நடந்த அனைத்து விடயங்களையும் அப்பெண் கூறியுள்ளார். உடனடியாக செயற்பட்ட உணவக உரிமையாளர் மண்சட்டியைத் திறந்து பார்த்துள்ளார்.

அங்கு அவர்களுக்கு அதிர்ச்சியே மிஞ்சியது. இதனையடுத்து அவர்களைத் தேடிய போது அவர்களைக் காண வில்லை. இறுதியில் கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொண்டுள்ளனர்.



# பேசாலைப் பொலிஸ் பிரிவில் விசேட சுற்றி வளைப்புத் தேடுதல்

(மன்னார் நிருபர்)

மன்னார் –பேசாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை (22) காலை முதல் பொலிஸார் விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து விசேட சுற்றிவளைப்பு சோதனைகளை முன்னெடுத்தனர்.

பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள வீடுகளுக்குச் சென்ற பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் போதைப் பொருள் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

பிரதி பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக நாட்டில் உள்ள அனைத்து மாகாணங்களிலும் போதைப் பொருள் சுற்றி வளைப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையிலேயே பேசாலை பொலிஸ் பிரிவில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர்கள் தொடர்பாகவும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சில போதைப் பொருள்களும் சோதனை நடவடிக்கையின் போது மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# இரு சிறுவர்கள் மரணமான வழக்குகள்; சந்தேக நபர்களுக்குத் தொடரும் மறியல்!

(பாறுக் ஷிஹான்)

நன்னடத்தை பாடசாலைச் சிறுவன் மர்மமாக மரணமான வழக்கில் மேற்பார்வையாளரான பெண்ணுக்கு மீண்டும் 14 நாள்கள் விளக்கமறியல் விதிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் கைதான அந்தப் பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் அது தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 04 ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்தி வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிறுவர் நன்னடத்தை பாடசாலையில்



தங்க வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண் சந்தேகத்தில் கல்முனை தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை (21) மீண்டும் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நீதிவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, மத்ரஸா பாடசாலை மாணவனின் மர்ம உயிரிழப்பு தொடர்பில் கைதான மௌலவியையும் மீண்டும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மத்ரஸா பாடசாலை மாணவனின் மர்ம உயிரிழப்பு தொடர்பிலான வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 04 திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கும் நேற்று வியாழக்கிழமை (21) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# இந்திய, இலங்கை வைத்திய நிபுணர்களால் வவுனியா மாவட்டத்தில் கண் சத்திர சிகிச்சை!

(கி.வசந்தரூபன், வி.ரி. சகாதேவராஜா)

வட மாகாணத்தில் அதிக எண்ணிக்கையில் வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 253 பேருக்குக்கான சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் ஜே.எம்.நிலக்சன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுனர் பி.எஸ்.எம். சாள்ஸின் நெறிப்படுத்தலில் வைத்திய நிபுணர் சர்வேஸ்வரனின் முயற்சியால் இந்திய துணைத் தூதரகத்துடன் இணைந்து கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமான சத்திர சிகிச்சை முகாம் நேற்று 21 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 11 ஆம் திகதி 188 பேரும், 12 ஆம் திகதி 230 பேரும், 13 ஆம் திகதி 172 பேரும், 14 ஆம் திகதி 153 பேரும், 18 ஆம் திகதி 172 பேரும், 19 ஆம் திகதி 56 பேரும், 20 ஆம் திகதி 157 பேரும், 21 ஆம் திகதி 125 பேரும் என கடந்த 8 நாள்களில் ஆயிரத்து 253 பேருக்கு கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

வட மாகாணத்தில் அதிகமானோருக்குச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

சத்திர சிகிச்சைகளை ஆறு பேர் கொண்ட கண் சிகிச்சை நிபுணர்கள் மேற்கொண்டனர். இதில் மூவர் இந்தியாவை சேர்ந்த கண் மருத்துவ நிபுணர்கள். இலங்கையை சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர்களான சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையை சேர்ந்த வைத்தியர் கசுன் குணவர்த்தன, வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர் பி. கிரிதரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர் நிஸ்மா ராசிக் ஆகிய குழுவினர் இந்தச் சிகிச்சையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த சிகிச்சையானது முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டதுடன்,





அனைத்து மாவட்டங்களிலும் இருந்து பயனாளிகளை அழைத்து வருவதற்கும் வாகன ஒழுங்குகளும் முற்றிலும் இலவசமாகவே ஒழுங்கு படுத்தப்பட்டது.

நோயாளிகள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்தவர்களாவர். நோயாளிகளுக்கு உணவு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது.

இதற்கான நிதி இலங்கை சுகாதார அமைச்சின் அனுமதியுடன் மலேசியாவை சேர்ந்த அலகா மற்றும் ஆனந்தா அறக்கட்டளைகள் முழுமையாக வழங்கியிருந்தன. இந்த சிகிச்சை முகாம் மூலம் இரண்டு கண்களும் பார்வையற்ற சில நோயாளிகள் மீண்டும் உலகைப் பார்க்கக் கூடியதாக வீடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ள தமிழக மீனவர்களை மீட்க துரித நடவடிக்கை

## - உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல்



இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீட்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 31 பேர் கடந்த கடந்த 9 மற்றும் 13 ஆம் திகதிகளில் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை விடுவிக்க தூதரக ரீதியாக நடவடிக்கை எடுக்கக் கோரி மீனவர்கள் பாதுகாப்பு அமைப்பின் தலைவரான பீட்டர் ராயன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

”கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கி கடந்த 1974 ஆம் ஆண்டு மேற் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில், பாக்கு நீரிணையில் இரு நாட்டு மீனவர் களுக்கும் மீன்பிடிக்க பாரம்பரிய உரிமை உள்ளதாக தெளிவாக கூறப்பட்டு உள்ளது.

ஆனால், கச்சத்தீவுக்கு செல்லும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தொடர்ச்சியாக கைது செய்து வருகிறது. மீனவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்து வருகின்றனர். கடந்த 1983 முதல் 2013 வரை 111 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 439 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

எனவே, தற்போது இலங்கை கடல் படை வசம் உள்ள தமிழக மீனவர்களை மீட்க துரித நடவடிக்கை எடுக்க மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும்” என மனுவில் அவர் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ். வி.கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி டி. பரத சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழக மீனவர்களின் விடுதலைக்காக தூதரக அளவில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தரப்பிலும், பாதிக் கப்பட்டுள்ள மீனவர்களின் குடும் பத்துக்கு உரிய நிவாரணம் வழங்கப் படும் என தமிழக அரசு தரப்பிலும் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து நீதிபதிகள் இந்த வழக்கை முடித்து வைத்து உத்தரவிட் டனர்.

# சத்தீஸ்கர் அமைச்சரவை விரிவாக்கம்: 9 பேர் பதவியேற்பு



சத்தீஸ்கர் முதல்வர் விஷ்ணு தியோ சாய் தலைமையிலான அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்பட்டு ஒரு பெண் உள்பட 9 பேர் புதிதாக அமைச் சர்களாக பதவி ஏற்றுள்ளனர்.

90 சட்டப்பேரவைத் தொகுதிகள் கொண்ட சத்தீஸ்கர் சட்டப்பேரவைக்கு கடந்த நவம்பர் 7 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெற்றது.

இதில், பா.ஜ.க. 54 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. பழங்குடி வகுப்பைச் சேர்ந்த விஷ்ணு தியோ சாய் கடந்த 13 ஆம் திகதி முதல் வராகப் பதவியேற்றார். அதேநேரில், அவருடன் அருண் சாவோ, விஜய் ஷர்மா ஆகியோர் துணை முதல்வர்களாகப் பதவியேற்றனர். மூவருக்கும் ஆளுநர் பிஸ்வபூஷன் ஹரிசந்தன் பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். இந்த விழாவில், பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த நிலையில், சத்தீஸ்கர் அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்பட்டது. ஒரு பெண் உள்பட 9 பேர் அமைச்சர்களாக பதவி ஏற்றுக் கொண்டனர். 8 முறை எம். எல்.ஏவான பிரிஜ்மோகன் அகர்வால், முன்னாள் அமைச்சர்கள் ராம்விசார் நேதம், கேதார் காஷ்யபீர், தயால்தாஸ் பெகல் ஆகியோர் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர்.

# அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு பொன்முடி வகித்த துறைகள்



சொத்துக் குவிப்பு வழக்கில் தண் டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொன்முடி வகித்து வந்த உயர் கல்வி உள்ளிட்ட துறையை அமைச்சர் ராஜ கண்ணப்பனுக்கு வழங்குவதற்கு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித் துள்ளார்.

பொன்முடி கவனித்து வந்த உயர் கல்வித் துறையை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு ஒதுக் கீடு செய்யக் கோரி ஆளுநருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் அனுப்பி யிருந்தார். இதையடுத்து, பொன்முடி வகித்து வந்த துறைகளை அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு ஒதுக்கீடு செய்ய ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித் துள்ளார்.

# பிரேக் பல்கலைக்கழகத்தில் துப்பாக்கிச் சூடு; 15 பேர் பலி

செக் குடியரசின் ப்ரக் நகரில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் 30 பேர் வரை காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

துப்பாக்கியுடன் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்திற்குள் பிரவேசித்த சந்தேக நபர், துப்பாக்கிச் சூட்டை நடத்தி யுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், அவர் இந்த தாக்குதலை நடத்தியமைக்கான காரணம் இன்னும் வெளியிடப்படவில்லை.

இந்தநிலையில், உடனடியாக சம்பவ இடத்திற்கு பிரவேசித்த பொலிஸார் சந்தேகநபர் மீது பதில் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.



இதன்போது, சந்தேகநபரும் உயிரிழந்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நவீன செக் குடியரசின் வரலாற்றில் இது மோசமான சம்பவமாக பதிவாகியுள்ளதாக அந்த நாட்டு பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பிரித்தானியாவில் குடும்ப விசாக்களுக்கான சம்பள வரம்பில் ஏற்படப்போகும் மாற்றம்




பிரித்தானியாவில் குடும்ப விசாக்களுக்கான சம்பள வரம்புகள் அதிகரிப்பில் மாற்றம் செய்ய அந்நாட்டு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அதன்படி வெளிநாட்டில் இருந்து ஒரு குடும்ப உறுப்பினரையோ அல்லது நண்பரையோ பிரித்தானியாவுக்கு அழைத்து வர, குறைந்தபட்சம் ஆண்டுக்கு 38,700 பவுண்டுகள் சம்பாதிக்க வேண்டும் என்று பிரித்தானிய அரசாங்கம் அறிவித்திருந்தது.

ஆனால், தற்போது இந்த முடிவில் சற்று மாற்றம் செய்து ஆண்டுக்கு குறைந்தபட்ச வருமானம் 29,000 பவுண்டுகள் பெற வேண்டும் என அறிவித்துள்ளது.

இருப்பினும் இந்த மாற்றம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய விசா விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே இந்த மாற்றங்கள் பொருந்தும் என்றும், ஏற்கனவே இங்கிலாந்தில் உள்ளவர்கள் தற்போதைய, மிகக் குறைந்த, வருமானத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

தற்போது குடும்ப உறுப்பினர் ஒருவரை பிரித்தானியாவுக்கு அழைத்து வர வேண்டுமெனில் அவரின் ஆண்டுக்கான குறைந்தபட்ச ஊதியம் 18,600 பவுண்டுகளாக இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஏமனில் 2 லட்சம் மக்கள் இடம்பெயர்வு!

ஏமனில் கடந்த ஆண்டு மாத்திரம் 2 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் நாட்டை விட்டு இடம்பெயரந்துள்ளனர் என ஐ.நா தெரிவித்துள்ளது.

காலநிலை மாற்றம், பொருளாதார மந்த நிலை உள்ளிட்ட காரணங்களால் அந்த நாட்டு மக்கள் இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, அந்த நாட்டில் விதிக்கப்பட்டுள்ள கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாகவும், பெரும்பாலான மக்கள் முறையான சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றாத காரணத்தினாலும் சிறுமிகளும், பெண்களும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.





# யானைகளின் அச்சுறுத்தலை கட்டுப்படுத்த நடவடிக்கை

(எம்.ஏ.ஏ.அக்தார்)

அண்மைக் காலமாக ஓட்டமாவடி, காவத்தமுனை போன்ற பிரதேசங்களில் அதிகரித்துள்ள யானைகளின் அட்டகாசங்களைக் கட்டுப்படுத்தக் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகத்தால் முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உத்தியோகத்தர் குழு இப்பிரதேசங்களுக்குச் சென்று கள நிலவரங்களைப் பார்வையிட்டது.

அக்கீல் அவசர சேவைப்பிரிவின் பணிப்பாளர் எம்.சீ.ஏ.நியாஸ்தீன் ஹாஜியாரின் ஏற்பாட்டில் ஓட்டமாவடி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் ஏ.எல்.அல் அமீன் தலைமையில் கணக்காளர் ஏ.சஜ்ஜாத் அகமட், ஓட்டமாவடி–01 தெற்கு கிராம சேவை உத்தியோகத்தர் எம்.எச்.எம்.கஸ்ஸாலி, ஓட்டமாவடி–01 வடக்கு கிராம சேவை உத்தியோகத்தர் ஏ.எல். எம்.பஸ்மின், ஓட்டமாவடி–01 தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் எஸ்.எல்.நளீர் ஆகியோரும் சமூகச் செயற்பாட்டாளர்களான முஹம்மது ஹலீம், அறூஸ், அஸ்ஜத் போன்றோரும் இதன் போது பிரசன்னமாயிருந்தனர்.

இதன்போது, காட்டு யானைகள் உள் நுழையும் ஓட்டமாவடி, காவத்தமுனை பிரதேசங்களில் இருளடைந்து காணப்படும் பகுதிகளில் அவசரமாக மின் விளக்குகளைப் பொருத்தும் பணியை முன்னெடுத்தல், பிரதேசங்களுக்குள் நுழைந்து அச்சுறுத்தலை ஏற்படுத்தும் யானைகளை விரட்டுவதற்கு கிராம சேவகர்கள் ஊடாகக் களச் செயற்பாட்டாளர்களுக்கு யானை வெடிகளைப் பெற்றுக்கொடுத்தல், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளை அழைத்து ஆற்றுப் பகுதியில் நிலைகொண்டுள்ள யானைகளைத் துரத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் எடுப்பது குறித்துத் தீர்மானிக்கப்பட்டது.

# நாவற்குழி அரும்புகள் ஒளி விழா!

(த.சுபேசன்)

தென்மராட்சி, நாவற்குழி அரும்புகள் முன்பள்ளியின் வருடாந்த ஒளி விழா சான்றோர் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

முன்பள்ளியின் முகாமைத்துவக்குழுத் தலைவர் திருமதி கமலா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சாவகச்சேரி பங்குத்தந்தை அருட்தந்தை ஞானரூபன் அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பசுந்தேசம் அமைப்பைச் சேர்ந்த லோ.சிவச்செல்வன், நாவற்குழி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.யோகேஸ்வரன் மற்றும் பி.பி. ஸ்ரூடியோ உரிமையாளர் பா.டருளன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது முன்பள்ளி மாணவர்களுடைய கலை நிகழ்வுகள் மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.



